**தேதி:- 21.01.2020 அசல் வழக்கு எண்.148/2010 வா.சா.1 (சாந்தி)**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-**

வா.சா.ஆ.1 ல் நல்லம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை சேர்க்கவில்லையா என்று கேட்டதற்கு சாட்சி சேர்க்கவில்லை என்று சொல்லிவிட்டு மீண்டும் சேர்த்துள்ளதாக மாற்றிக் கூறுகிறார். எந்தெந்த லக்கச் சொத்துக்களாக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றும், என்னென்ன புலஎண்ணில் உள்ளன என்றும் சொல்லியுள்ளேனா என்றால் எனக்குத் தெரியாது. நல்லம்மாள் சொத்துக்களை என் தகப்பனாரும், சகோதரர்களும் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். நல்லம்மாள் சொத்துக்கள் குறித்து வழக்குரையில் சொல்லவில்லை என்றும் அந்த சொத்துக்களை சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. எந்தெந்த பூர்வீக சொத்தில் இருந்து எவ்வளவு வருமானம் எந்த காலகட்டத்தில் வந்தது என்று வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்குத் தெரியவில்லை. 1 ஆம் வாதி அவரது மகன் செந்தில்குமார் பெயரில் தாவாவில் சில சொத்துக்கள் குறித்து செட்டில்மெண்டு எழுதி வைத்துள்ளார். நான் என் கணவர் பெயரில் ஒரு செட்டில்மெண்டு எழுதி வைத்தேன். அந்த சொத்தில் எனக்கு எப்படி உரிமை ஏற்பட்டது என்றால் அப்பா அண்ணன் தம்பி சொத்தில் இருந்து நான் உரிமை கேட்கிறேன். வா.சா.ஆ.17 சொத்து குறித்து என் பெயரில் என் தகப்பனாரோ, என் சகோதரர்களோ எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை. அநத் சொத்தை ஏற்கனவே என் சகோதரர்கள் விற்றுவிட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.17 சொத்து குறித்து வீட்டுவரியோ, சொத்துவரியோ மின்இணைப்போ என் பெயரில் மாற்றப்படவில்லை. வா.சா.ஆ.17 க்கு பிறகு என் கணவர் பெயரிலும் அவை மாற்றப்படவில்லை. வா.சா.ஆ.17 சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் என் சகோதரர்களை ஏமாற்றி பணம் பறிப்பதற்காக அதை எழுதி வைத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சாஆ.2 சட்டஅறிவிப்பிற்கு என் தகப்பனார் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தவறாக சொல்கிறேன் என்றும் தாவாச் சொத்துக்கள் என் தகப்பனாரின் பூர்வீகச் சொத்துக்கள் என்றும், அதில் எங்களுக்கு பாகஉரிமை இல்லை என்றும் வா.சா.ஆ.3 படி என் தகப்பனார் பதில்அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஆரம்பத்தில் இருந்தே செல்லாது என்பதால் அது செல்லாது என்ற பரிகாரம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

என் தகப்பனார் தாவா 4 ஆம் லக்கச் சொத்தில் விற்ற வீட்டுமனைகளையும் வேண்டுமென்றே இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 4 ஆம் லக்கச் சொத்தில் என் தகப்பனார் விற்ற கிரையங்கள் செல்லாது என்று நான் பரிகாரமும் கேட்கவில்லை என்றும், கிரையம் வாங்கிய நபர்களை நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றும் சொன்னால் எனக்குத் தெரியாது. கிரையம் பெற்ற நபர்கள் அங்கு வீடு கட்டிவிட்டாரகள். வா.சா.ஆ 1 படி என் தகப்பனாருக்கு ஒதுப்படாத தாவா 5 ஆம்லக்கச் சொத்து குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கேட்க எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வேண்டுமென்றே இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்களை உற்பத்தி செய்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் தாவாச்சொத்தில் எந்த காலத்திலும் கூட்டுசுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 படி ஏற்கனவே பாகப்பிரிவினை ஆன சொத்து குறித்து மீண்டும் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 படி எனக்கும் , என் சகோதரிகளுக்கும் ஒதுக்கப்பட்ட சொத்தை நாங்கள் விற்றுவிட்டு என் சகோதரர்களிடம் பணம் பறிப்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் தாவா பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

19 முதல் 22 மற்றும் 25 முதல் 27 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாசாஆ.2 சட்டஅறிவிப்பில 16 சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் 7 சொத்துக்களைதான் காட்டியுள்ளேன் அதிலுள்ள சொத்துக்களில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை நாங்கள் விற்றுவிட்டதால்தான் வழக்குரையில் நாங்கள் இதர சொத்துக்களை காட்டவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 படி என் தகப்பனார் 1 ஆம் வாதிக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தாரா என்றால் 1 ஆம் வாதி காசு கொடுத்துவாங்கினார். 1 ஆம் வாதி அதற்கான பணம் கொடுக்கவிலலை என்றால் பணம் கொடுத்துத்தான் வாங்கினார். வழக்கு தாக்கல்செய்த பிறகு தாவாச் சொத்துக்களில் சிலவற்றை நாங்கள் விற்றுவிட்டோம் என்றால் சரிதான். தாவா 2 ஆம் லக்கச் சொத்தில் 1 ஆம் வாதிக்கு இருந்த பங்கை அவர் 23 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து

கொடுத்துவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. சாட்சி மீண்டும் தாவா 2 ஆம் லக்கச் சொத்தில நானும் 1 ஆம் வாதியும் 23 ஆ் ம் பிரதிவாதிக்கு அவரவர் பங்கை யகிரையம் செய்து கொடுத்துவிட்டோம் என்று மாற்றிக் கூறுகிறார். அதே சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகளும் அவரது வாரிசுகளும் பி.சா.ஆ.1 படி அவர்களுக்கு வந்த சொத்துக்களை 18 முதல் 22 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் எங்களுக்கு உரிமையில்லாத சொத்துக்களை 23 ஆம் பிரதிவாதிக்கு நாங்கள் கிரையம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.அதனால் 18 முதல் 22 பிரதிவாதிகள் வாங்கிய கிரையம் சட்டப்படியானது என்றும் அவர்களிடமிருந்து பணம் பறிப்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. 18 முதல் 22 பிரதிவாதிகள் யார் யாரென்று எனக்குத் தெரியாது. 1 ஆம் வாதியின் தூண்டுதலின் பேரில் பொய் வழககுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2016 ஆம் ஆண்டு நாங்கள் சொத்தை குறைவாக மதிப்பிட்டு செய்து கிரையம் பதிவு செய்யப்படாமல் மாவட்ட ஆட்சியர் அலுவலவகத்தில் நிலுவையில் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. நாங்கள் செய்த கிரையங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அவற்றில் வாதிகளாகிய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், என் தகப்பனார் இருக்கும் போதேபி.சா.ஆ.1 படி பாகம் பிரித்துக் கொடுத்துவிட்டார் என்றும் அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.